2017 மார்ச் 23]

வரத்து இருக்கின்றதோ அப்பொழுதெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திருக்கும். மக்கள் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கோரிக்கைகள் வைப்பதன் அடிப்படையில் அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் எத்தனை நாட்களுக்குத் தேவைப்படுகின்றனவோ அத்தனை நாட்களுக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லா காலங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து வைக்க வேண்டும் என்கிறார்கள். ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்படுவதற்கு ஒரு மாதத்திற்கு 25,000 ரூபாய் செலவாகும் என்ற அடிப்படையில், நெல் வரத்தே இல்லாதபோது நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து வைத்திருக்க முடியாது. எனவேதான், தேவைக்கேற்ப, நெல் வரத்து இருக்கின்றபோது, நிச்சயமாக, உறுதியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

77—

கைத்தறி விற்பனை நிலையம்

***12774—திரு. கே.வி. சேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என

மாண்புமிகு போளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.*

திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியில், போளூர் நகரில் பல ஆண்டுகளாக கைத்தறி விற்பனை நிலையம் நல்ல முறையில் இயங்கி வந்தது. ஏனோ தெரியவில்லை, சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த கைத்தறி விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ளது. ஆகவே, மூடப்பட்ட கைத்தறி விற்பனை நிலையத்தினை மீண்டும் திறக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, போளூர் நகரில் இயங்கிவந்த கோ—ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததாலும், வாடிக்கையாளர்கள் குறைந்துகொண்டே வந்த காரணத்தினாலும், துறை ஆய்வுக்குப் பின் 1994 ஆம் ஆண்டில் மூடும் நிலை ஏற்பட்டது. திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது போளூர், வந்தவாசி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மூன்று இடங்களில் கோ—ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும், தேவைக்கேற்ப போளூர் பகுதியில் உள்ள அரசு சார் நிறுவனங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் இந்த விற்பனை நிலையங்களின் ஊழியர்கள் நேரில் சென்று campus sales எனப்படும் வளாக விற்பனை செய்து கைத்தறித் துணிகளை விற்பனை செய்து வருகின்றனர். எனினும், போளூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசுக் கட்டடங்களில் குறைந்த வாடகைக்கு இடம் கிடைக்கும்பட்சத்தில் அங்கு விற்பனை நிலையம் அமைப்பது குறித்து மீண்டும் ஆய்வு செய்து உரிய

2017 மார்ச் 23]

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.*

திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் தொகுதியில் கைத்தறி ஆடையினை உடுத்த பெரும்பான்மையான மக்கள் விரும்புகின்றனர். மேலும், பட்டு மற்றும் காஞ்சிபுரம் பட்டு போன்ற சேலைகளும் தேவைப்படுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கைத்தறி விற்பனை நிலையத்தினைத் திறக்க முன்வரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த காரணத்தினாலேயே போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் மூடப்பட்டிருக்கிறது. அங்கே கைத்தறித் துணியை அணிகிறவர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஆய்வுக்குப் பின், தேவையிருப்பின், முடிவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மை வாய்ந்த பண்பாட்டுச் சின்னமாய் இருக்கக்கூடிய பட்டுப் புடவைகளை தயாரிக்கக்கூடிய காஞ்சி மாநகரில் தனியார் மற்றும் அரசு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகத் தயாரிக்கக்கூடிய பட்டுப் புடவைகளை பெரும்பான்மையான மக்கள் விரும்பி வாங்குவதற்கு வருகை தருகிறார்கள். நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ஈரோட்டில்*

புறவழிச் சாலையில் அமைந்திருக்கக்கூடிய Tex Valley போல காஞ்சியின் புறவழிச் சாலையில் Silk Valley என்ற பெயரில் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தனியாரின் பங்களிப்போடு Public–Private participation–ல் ஒரு Food Court, வாகன நிறுத்தம் மற்றும் அனைத்து வசதிகளும்கொண்ட மிகப்பெரிய ஒரு தனி விற்பனை வளாகத்தினை உருவாக்குவதன் மூலமாக, பட்டு, கைத்தறி நெசவுத் தொழிலும் காக்கப்படும், விற்பனையும் பெருகும் என்ற எண்ணத்தில் அதுபோன்ற வளாகத்தினை அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *முதலீட்டாளர்கள் முன் வருவார்கள் என்று சொன்னால், அரசு கண்டிப்பாகப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அரசியல் தலைவர்களில், இந்திய அரசியல் தலைவர்களில், தமிழகத்தின் அரசியல் தலைவர்களில் 'எனது தலைமையிலான தமிழக அரசு' என்று சொல்லக்கூடிய, தகுதி வாய்ந்த தலைவியாக, தமிழகத்தை தனித்துவம் வாய்ந்த மாநிலமாக* (மேசையைத் தட்டும் ஒலி) *வழிநடத்திய ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தலைமைக்கு ஒரு சோதனை வரும்பொழுது, தாயின் தலைமகனாகத் தமிழகத்தைத் தாங்கி நின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

குடியாத்தம் நகராட்சி, குடியாத்தம் பகுதியில், ஜவுளி நெசவு, கைலி என்று சொல்கின்ற லுங்கிகளை உற்பத்தி செய்து, தங்களுடைய வாழ்வாதாரத்தினை முன்னிறுத்தி கைத்தறி நெசவாளர்கள் தொழிலைச் செய்து வருகின்றனர். எனவே, குடியாத்தம் பகுதியில் ஒரு விற்பனை நிலையத்தை உருவாக்கி, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்து, வாழ்க்கையில் மேன்மையடைய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

யோகா மற்றும் தியான மையம்

***7135—திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோட்டில் யோகா மற்றும் தியான மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) யோகா மற்றும் இயற்கை வாழ்வியல் மருத்துவமனைப் பிரிவு, நாமக்கல் மாவட்ட தலைமை மருத்துவமனையில் நல்லமுறையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதன்மூலம் மக்கள் பெரிதும் பயன்பட்டு வருகிறார்கள். ஆகையினால், திருச்செங்கோட்டிலே யோகா மையம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.